### பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவது அவரவர் விருப்பம்! எடப்பாடி எந்தக் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினாரோ, அதே

# காலை வாரி விட்டு துரோகம் செய்ததுதான் தவறு!

### இலால்குடி தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் எடப்பாடி பழனிசாமிக்கு

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதிலடி!



**திருச்சி,ஏப்.13-**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், இலால்குடியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இலால்குடி சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் த.பாரிவள்ளலுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்து பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், "பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவது தவறா' என்று எடப்பாடி பழனிசாமி கேட்கிறார். காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவது அவரவர் விருப்பம். ஆனால் எந்தக் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினாரோ, அதே காலை வாரி விட்டு விட்டு துரோகம் செய்ததுதான் தவறு என்று சொல்கிறேன்" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இந்தச் சிறப்பான, எழுச்சியான, அன்பான வரவேற்பை அளித்திருக்கக்கூடிய அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகிற சட்டமன்றத் தேர்தலில், இந்த இலால்குடி சட்டமன்றத் தேர்தலில் நம் அருமைச் சகோதரர் வெற்றி வேட்பாளர் பாரிவள்ளல் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள் என்று உங்களிடம் கேட்பதற்காக நான் வந்தேன். ஆனால், உங்களின் எழுச்சியையும் ஆரவாரத்தையும் பார்க்கும்போது ஏற்கனவே நீங்களெல்லாம் ஒரு முடிவு செய்துவிட்டீர்கள் என்று தெரிகிறது.

### உதயசூரியன் சின்னம்

கடந்த சட்டமன்றத் தேர்தலில், உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து கிட்டத்தட்ட 17,000 வாக்குகள் வித்தியாசத்தில் உதயசூரியன் சின்னத்தை வெற்றி பெறச் செய்தீர்கள். இந்த முறை நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் குறைந்தது 50,000 வாக்குகள் வித்தியாசத்தில் சகோதரர் பாரிவள்ளலை வெற்றி பெறச் செய்து அனுப்ப வேண்டும்.

இந்த இலால்குடியில் நம் வெற்றி வேட்பாளர் பாரிவள்ளல் அவர்கள் நிற்கிறார்கள். எதிர் வேட்பாளர் யார்? உங்களுக்குத் தெரியும். அ.தி.மு.க. சார்பில் லாட்டரி சீட்டு விற்பவர் நிற்கிறார். எத்தகைய வேட்பாளர் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். ஒரே ஒரு சிறு எடுத்துக்காட்டு மட்டும் சொல்கிறேன்.

அந்த அம்மையாரின் சொத்து மதிப்பு 6,000 கோடி. அவர் மீதும் அவர் குடும்பத்தின் மீதும் இதுவரை 200க்கும் அதிகமான வழக்குகள் உள்ளன. 1,000 கோடி ரூபாய் அளவுக்கு சொத்துகள் இப்போது வரை அமலாக்கத்துறை, சி.பி.ஐ., நீதிமன்றங்கள் முடக்கி வைத்துள்ளன. 1,000 கோடி சொத்தை மட்டும் முடக்கி வைத்துள்ளார்கள்.

### மக்களைச் சீரழிப்பதுதான்

இன்று அவர்கள் குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சியில் இடம் பிடித்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்தின் ஒட்டுமொத்த நோக்கம் மீண்டும் தமிழ்நாட்டுக்குள் எப்படியாவது லாட்டரி சீட்டு, லாட்டரித் தொழிலைக் கொண்டு வந்து தமிழ்நாட்டு மக்களைச் சீரழிப்பதுதான் அவர்களின் ஒரே நோக்கம். இலால்குடி மக்களைப் பணத்தால் வெற்றி பெற்றுவிடலாம் என்று தவறாகக் கணக்கிட்டு வந்திருக்கிறார்கள். நீங்கள் அவர்களுக்குச் சொல்லுங்கள். இலால்குடி மண் சாதாரண மண் அல்ல, சுயமரியாதை மண். ஒவ்வொன்றையும் யோசித்து முடிவெடுக்கக்கூடிய மண். என்றுமே நீங்கள் பணத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் கிடையாது, அன்புக்குத்தான் கட்டுப்பட்டவர்கள். தி.மு.கவிற்கு, உதயசூரியன் சின்னத்துக்குத்தான் கட்டுப்பட்டவர்கள்.

அதனால்தான் நான் மீண்டும் கேட்டுக் கொள்வது, நீங்கள் சகோதரர் பாரிவள்ளலை வெற்றி பெற வைப்பது உறுதி. நான் உங்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம் எதிர்த்துப் போட்டியிடக்கூடிய வேட்பாளர் டெபாசிட் இழக்கும் அளவுக்கு நம் வெற்றி இருக்க வேண்டும்.

### பல்வேறு திட்டங்கள்

கடந்த 12 நாட்களாக, தமிழ்நாடு முழுவதும் கிட்டத்தட்ட 60 சட்டமன்றத் தொகுதிகளுக்குச் சென்று அங்கே இருக்கக்கூடிய மக்களைச் சந்தித்து நம் வேட்பாளர்களுக்கு வாக்கு கேட்டுவிட்டு இன்று இந்த இலால்குடி தொகுதிக்கு வந்திருக்கிறேன். 60 தொகுதிகளுக்கும் நம் சட்டமன்ற வேட்பாளர்களை அழைத்துச் சென்று வாக்குறுதி கொடுத்து வாக்குகள் கேட்கிறேன், உதய சூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று, எந்தத் தைரியத்தில் கேட்கிறேன்? ஏனென்றால், கடந்த ஐந்து ஆண்டுகளில் அத்தனை திட்டங்களை ஒவ்வொரு தொகுதிக்கும் நம் முதலமைச்சர் செய்து கொடுத்திருக்கிறார் என்கிற அந்த மன உறுதியோடும் தைரியத்தோடும் சென்று கேட்கிறேன்.

### இலால்குடிக்கான திட்டங்கள்

**இந்த இலால்குடி தொகுதியில் என்னென்ன செய்திருக்கிறோம் என்று ஒரு சிறு எடுத்துக்காட்டு சொல்கிறேன்.**

**32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையத்தை, நம் திராவிட மாடல் அரசு கட்டி கொடுத்துள்ளது. நான்தான் இரண்டு மாதங்களுக்கு முன்னால் திறந்து வைத்தேன்.**

**109 கிராமங்களில் 240 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக்குடிநீர்த் திட்டத்தை நம் அரசு சார்பில் நம் முதலமைச்சர் கொடுத்தார். 20 இடங்களில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குளங்கள் தூர்வாரும் பணி இன்று நடைபெறுகிறது.**

**அரசு மருத்துவமனையில் 7 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுப் புதிய தாய் சேய் நலப்பிரிவு கட்டடம் கட்டப்பட்டுள்ளது.**

**புதூர் உத்தமனூர் ஊராட்சியில் ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டிக் கொடுத்தது நம் முதலமைச்சர், நம் திராவிட மாடல் அரசு.**

**திருமங்கலம் ஊராட்சியில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை கட்டியிருக்கிறோம். இலால்குடி நகராட்சி அலுவலகத்துக்கு இன்று புதிய கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.**

**10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திடக்கழிவு மேலாண்மைப் பணி இன்று நடைபெற்றிருக்கிறது. புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்துக்கு 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இன்று புதிதாக அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.**

**குமுளூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதிதாக வகுப்பறைக் கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். கல்லக்குடி, பூவாளூர், புள்ளம்பாடி பேரூராட்சியில் 62 கோடி ரூபாய் நம் முதலமைச்சர் ஒதுக்கீடு செய்யச் செய்து இன்று பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**சுமார் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்று கூட்டுக்குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்தனையும் நம் திராவிட மாடல் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் இந்த இலால்குடி தொகுதிக்குச் செய்து கொடுத்துவிட்டு இன்று மீண்டும், 'எங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள்' என்று கேட்டு உங்களிடம் வந்திருக்கிறேன்.**

**இது மட்டும் அல்ல, பல்வேறு திட்டங்களைக் கடந்த முறை சட்டமன்றத் தேர்தலின் போது நாம் சொன்ன வாக்குறுதிகள், சொன்ன திட்டங்கள் அத்தனையும் செய்து கொடுத்திருக்கிறோம்.**

### மிக முக்கியமான தேர்தல்

சரி நம் தலைவர் தொடர்ந்து சொல்கிறார், வருகிற சட்டமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். ஏன், முக்கியமான தேர்தல்? இந்தத் தேர்தல் டெல்லி அணி (Vs) தமிழ்நாடு அணி. தமிழ்நாடு அணியின் தலைவர், நம் தலைவர்தான் தலைவர். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டுக்கு நமக்கு ஏதாவது செய்திருக்கிறார்களா? நாம் கேட்கிற நிதி உதவியைக் கொடுக்கிறார்களா? தமிழ்நாட்டுக்கு ஏதாவது திட்டங்கள் கொடுத்திருக்கிறார்களா? இது எதுவுமே இல்லாமல், நம் முதலமைச்சர் தமிழ்நாட்டுக்கு இவ்வளவு செய்திருக்கிறார், இவ்வளவு சாதனைகள் புரிந்திருக்கிறோம், இவ்வளவு திட்டங்கள் கொடுத்திருக்கிறோம். தமிழ்நாட்டுக்குள் பா.ஜ.கவை நேரடியாக மக்கள் நுழைய விட மாட்டார்கள் என்பதால், இன்று அ.தி.மு.க என்கிற போர்வையைப் போர்த்திக்கொண்டு, பா.ஜ.க தமிழ்நாட்டுக்குள் நுழையப் பார்க்கிறது.

நீங்கள் முரட்டுப் பக்தர்கள் பார்த்திருப்பீர்கள். முரட்டுத் தொண்டர்கள் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். எங்காவது பார்த்திருக்கிறீர்களா ஒரு முரட்டு அடிமையை? மோடியின் நம்பர் ஒன் முரட்டு அடிமை எடப்பாடி பழனிசாமி. இது ஏதாவது கெட்ட வார்த்தையா? அவருக்குப் பயங்கரமாகக் கோபம் வந்துவிட்டது. என்ன செய்தார் தெரியுமா? என்னை அதிகமாகத் திட்ட ஆரம்பித்துவிட்டார். "உதயநிதிக்கு எந்த அனுபவமுமே கிடையாது, எந்த அனுபவத்தை வைத்து இப்படிப் பேசுகிறீர்கள்" என்று கேட்டார். நான் சொன்னேன், "உங்களுக்கு இருக்கிற அனுபவம் எனக்குக் கிடையாதுதான்.

மற்றவர் காலில் விழுந்துதான் அவர் முதலமைச்சர் ஆனார். 2016இல் மக்கள் வாக்களித்தது மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா அம்மையாருக்கு. அந்த அம்மா இறந்த பிறகு உள்ளே புகுந்து சென்று முதலமைச்சர் ஆனார். "இந்த அனுபவம் எனக்குக் கிடையாது" என்றேன். பதவிக்காக யார் காலையும் பிடித்த அனுபவம் எனக்குக் கிடையாது. சங்கி கூட்டத்துக்குப் பயப்படும் அனுபவம் எனக்குக் கிடையாது. இதைத்தான் நான் சொன்னேன்.

இப்போது என்ன சொல்கிறார் தெரியுமா, பேச்சை மாற்றிவிட்டார். ``ஆமாம், நான்தான் சென்று விழுந்தேன், அந்த அம்மா எனக்குப் பொறுப்பு கொடுத்தார்கள், பதவி கொடுத்தார்கள், அதனால் சென்று விழுந்தேன். உனக்குப் பண்பே இல்லை. 'பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவது தவறா' என்று எடப்பாடி பழனிசாமி கேட்கிறார். காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்குவது அவரவர் விருப்பம். ஆனால், எந்தக் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினாரோ, அதே காலை வாரி விட்டு விட்டு துரோகம் செய்ததுதான் தவறு என்று சொல்கிறேன்

போதாகுறைக்கு, அந்த அம்மா காலில் விழுந்து முதலமைச்சர் பதவி வாங்கினீர்கள், அதற்குப் பிறகு அந்த அம்மா காலையே வாறிவிட்டு விட்டு, ``நீயா என்னை முதலமைச்சர் ஆக்கினாய்'' என்று கேட்டீர்கள். அதைத்தான் நான் தவறு என்று சொன்னேன். இவர் யார் காலிலெல்லாம் விழுகிறாரோ எல்லார் காலையும் வாரிவிட்டுவிடுவார். இன்று சசிகலா அம்மா நம் அணிக்கு வந்துவிட்டார்கள். அவர்கள் களத்தில் இறங்கிவிட்டார்கள். எடப்பாடி பழனிசாமி என்னைத் தவறாகத் திட்டுகிறார். ``இவன் செத்துப் போயிருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டார். ``இவன் இருந்து என் உயிரை வாங்குகிறான்'' என்று கூறிவிட்டார். மிகுந்த மன அழுத்தத்தில் சுற்றுகிறார்.

சசிகலா அம்மா என்ன சொல்லியிருக்கிறார்கள் தெரியுமா? ``ஆமாம், அந்தப் பையன் காட்டுவது சரியானதுதானே, நீதான் என் கால்களை வாரினாயே" என்று சசிகலா அம்மா சொல்லிவிட்டார். நாய்க்குப் பிஸ்கட் போட்டால் கூட அது நன்றியோடு நான்கு நாட்கள் சுற்றிக்கொண்டிருக்கும். அந்த நன்றி கூட இல்லை என்று நான் இப்போது சொல்லவில்லை. சசிகலா அம்மா சொல்கிறார்கள்.

### புதிய வாக்குறுதிகள்

தலைவர் அவர்கள் சில வாக்குறுதிகள் கொடுத்திருக்கிறார்கள், அதை மட்டும் இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். கலைஞர் மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாய் அல்ல, ஆட்சிக்கு வந்தோம் என்றால் 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், 5ஆம் வகுப்பு வரை இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை 8ஆம் வகுப்பு வரை உயர்த்தித் தருவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

கல்வி ஊக்கத்தொகை 1,000 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதை 1,500 ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்று தலைவர் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்.

முதியோர் உதவித்தொகை இப்போது 1,200 ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆட்சி வந்தவுடனே 2,000 ரூபாயாக உயர்த்திக் கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

கலைஞர் கனவு இல்லத் திட்டத்தில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 10 லட்சம் வீடுகள் கட்டப்பட்டு யார் யாருக்கெல்லாம் வீடு இல்லையோ அவர்களுக்கெல்லாம் வீடு கொடுப்போம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறோம்.

ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வீட்டு மகளிருக்கும் 8,000 ரூபாய் கொடுத்துவிடுவார். அந்த 8,000 ரூபாயை வைத்துக்கொண்டு உங்கள் வீட்டிற்கு என்ன மின்சாதன பொருள் தேவையோ குளிர்சாதனப் பெட்டியோ, தொலைக்காட்சியோ, மிக்ஸியோ, கிரைண்டரோ எதுவாக இருந்தாலும் அதை நீங்களே முடிவு செய்து நீங்களே சென்று வாங்கிக் கொள்ளலாம். இதையெல்லாம் நம் முதலமைச்சர் வாக்குறுதியாகக் கொடுத்திருக்கிறார். நம் முதலமைச்சர் சொன்னால் நிச்சயம் செய்வார். அதைச் செய்து காட்ட வேண்டிய நேரம் வருகிற தேர்தல்.

### பிரச்சாரம் செய்ய- வேண்டும்

இன்று தேதி ஏப்ரல் 11. 23ஆம் தேதி தேர்தல். இன்னும் இன்னும் 12 நாட்கள் உள்ளன. அடுத்த 12 நாட்கள் நீங்கள் ஒவ்வொருவரும் சென்று ஒவ்வொரு வாக்காளரைச் சந்தித்து, ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கி, நம் திட்டங்களைச் சொல்லி, ஏன் தி.மு.க.வுக்கு வாக்களிக்க வேண்டும், ஏன் உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும், ஏன் சகோதரர் பாரிவள்ளலை வெற்றி பெற வைக்க வேண்டும் என்கிற பிரச்சாரத்தைச் செய்யவேண்டும்.

நீங்கள் 23ஆம் தேதி வாக்குச்சாவடிக்குக் காலையில் சென்றால் வாக்குப்பெட்டி இருக்கும். வாக்குப்பெட்டியில் முதல் பெயர் பாரிவள்ளல் பெயர். முதல் சின்னம் உதயசூரியன் சின்னம். வாக்குப்பதிவின் போது, முதல் இடத்தில் இருப்போம். வாக்கு எண்ணிக்கை நாள், மே மாதம் நான்காம் தேதி, எப்படி வாக்குப்பெட்டியில் முதல் இடத்தில் இருக்கிறோமோ அதே மாதிரி வாக்கு எண்ணிக்கையின்போது இலால்குடியில் நம் உதயசூரியன் மீண்டும் உதித்துவிட்டது என்கிற செய்தியுடன், அந்த வெற்றியை இங்கே உறுதி செய்ய வேண்டும்.

உங்களையெல்லாம் அன்போடு கேட்கிறேன், பண்போடு கேட்கிறேன், பாசத்தோடு கேட்கிறேன், உரிமையோடு கேட்கிறேன், உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால் தலைவரின் மகனாக இருந்து கேட்கிறேன். இன்னும் பெருமையாக, பூரிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் பேரனாக இருந்து கேட்கிறேன், உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள். சகோதரர் பாரிவள்ளலை மிக அதிகமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள். நிச்சயம் நம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையப் போவது உறுதி.

ஆதரிப்பீர் உதயசூரியன், உதயசூரியன்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் கே.என்.நேரு, மாவட்டக் கழகச் செயலாளர் வைரமணி, நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு, ஆடுதுறை உத்திராபதி, விமலநாதன், கருணாநிதி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் புருஷோத்தமன், துரை கந்தசாமி, தங்கவேல், ஈஞ்சூர் சதீஷ், குமுளூர் குமார், மார்ட்டின், வினோத்குமார், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் துரைமாணிக்கம், சக்திவேல், பெரியய்யா, சண்முகநாதன், இளங்கோவன், செல்வராசா, பால்துரை, முத்துக்குமார், பன்னீர்செல்வம், இளைஞர் அணித் துணை அமைப்பாளர்கள் ஸ்டான்லி, சூர்யா, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளின் நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிட கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயகக் கட்சி, எஸ்.டி.பி.ஐ, மக்கள் நீதி மய்யம், முக்குலத்தோர் புலிப்படை, தமிழர் தேசம், தமிழ்ப்புலிகள் கட்சி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.